Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 15    ( 31 - 08 - 1991 )    சனிக்கிழமை    ஓசை: 194

## கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

அமைச்சரவையிலிருந்து ஒன்பது அமைச்சர்கள் பதவி விலகியதால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளார். 1978ஆம் ஆண்டின் சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பின் 70 ஆம் பிரிவின்கீழ் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பாராளுமன்றத்தின் கூட்டத்தை நேற்று நள்ளிரவு பன்னிரண்டு மணிமுதல் செப்டம்பர்மாதம் இருபத்திநான்காம் திகதி காலை 10.40 மணிவரை ஒத்திவைத்துள்ளார், பாராளுமன்றக் கூட்டத்தொடர் முன்னைய ஏற்பாட்டின்படி எதிர்வரும்செவ்வாயன்று கூட இருந்தது. ஜனாதிபதியை பதவி விலகக்கோரும்தீர்மானத்தின்மீது பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறாமல் தடுக்கும்வகையில் ஜனாதிபதி சபையின் கூட்டத்தைப் பின்போட்டார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இதேவேளை நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன்மூலம் தற்போதைய அரசியல் (4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசா ஒரு சர்வாதிகாரி;

# ஜனநாயக மீட்பிற்கு போராடுகிறோம்

### 5 அமைச்சர் 7 இராஜா. அமைச். மீது ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

ஐந்து அமைச்சர்கள் மீதும் ஏழு இராஜாங்க அமைச்சர்களின் நிலைப்பாடுபற்றியும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பிரதமர் வீட்டில் கூடிய ஐ. தே. க. அவசர கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பத்திரிகையாளர் மத்தியில் லலித்

(கொழும்பு)

"ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஒரு சர்வாதிகாரி. நாட்டிலும், கட்சியிலும் ஜனநாயகத்தை நிலை நாட்டவே நாம் போராடுகின்றோம்" என அமைச்சர் பதவியில் இருந்து விலகிய அத்துலத்முதலி பிரேமதாசாவைக் குற்றஞ்சாட்டினார்.

பதவி விலகிய அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி ஜி எம். பிரேமச்சந்திரா மற்றும் முன்னாள் அமைச்சர் திஸநாயக்கா ஆகியோர் நேற்று ஒன்றாக செய்தியாளர் மாநாட்டை நடத்தினர்

1978-ல் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாமல் செய்துவிட்டு பிரதம மந்திரி முக்கியத்துவம் பெறும் வகையிலான ஆட்சி முறையை ஏற்படுத்தத் தானும் தனது குழுவினரும் முயற்சி செய்யப்போவதாக அத்துலத் முதலி தெரிவித்தார். மேலும், ஜனாதிபதி பிரேமதாசா பதவி இழப்பது உறுதி என்றார் அவர்.

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற அங்கத்தினர்கள் சுதந்திரமாகச் செயற்பட ஜனாதிபதி பிரேமதாசா அனுமதிக்கவில்லை என்றும், எனவே தான் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து விலக்க முயற்சிப்பதாக காமினி திஸநாயக்கா கூறியிருக்கிறார்.

அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்து விட்டதாகவும், பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இழந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

## ஒன்பது அமைச்சர்கள் பதவி துறப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றத்திலிருந்து ஒன்பது அமைச்சர்கள் பதவி விலகியுள்ளதாக கொழும்பில் இருந்துவரும் தக

## தவறுதலாக 3 எம்.பிகள் கையொப்பம் இட்டனராம்

## வீரவணக்கம்

### அஜந்தன்

29-08-91 அன்று மணலாற்றுப் பகுதியில் நடந்த விபத்துச் சம்பவம் ஒன்றில் அஜந்தன் மதியாபரணம் தவகாந்தன், பூமகள்வீதி, அரியாலை) விபத்து மரணமானார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கிட்டு ஜெனிவாவில்?

(லண்டன்)

அரசியல்அடைக்கலம் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டனை விட்டு வெளியேறிய திரு. கிட்டு தற்போது ஜெனிவாவில் தங்கியிருக்கக் கூடும் என்று நேற்றிரவு பி.பி.ஸி. கூறியது.

## மேலும் பலர்

## மண்டைதீவு மீது பீரங்கி தாக்கு மக்கள் வெளியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்குக் கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலின் போது இருவர் காயமடைந்தனர். மண்டைதீவு மக்கள் கிராமத்தைவிட்டு வெளியேறினர்.

மண்டைதீவுக் கடற்பரப்பில் நேற்றுக் காலை சிறிலங்கா கடற் படைக்குச் சொந்தமான பல கப்பல்களைக் காணக் கூடியதாக இருந்தது. இதில் ஒரு பெரிய கப்பலும், ஐந்து பீரங்கிப் படகுகளும், நான்கு விசைப்படகுகளும் காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரித்து நின்ற இப் பீரங்கிப் படகுகளில் இருந்து திடீரென ...களை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. இத் தாக்குதலில்திருமதி முடியப்பு என்பவரும், அவரது மகள் பவளமும் காயமடைந்தனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி யாழ்ப்பாணப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளனர்.

அதேவேளை கடற்படை படகுகள் யாவும் நண்பகல் அளவில் மண்டைதீவு கடற்பரப்பை விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. (88

## பாவற்குளத்தில் மோதல்; இரு புலிகள் வீரமரணம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் பகுதியில் இருக்கும் ஆவரம்துலா என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா ஆயுதப் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு... கொண்டனர். இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரிய வரவில்லை.

இந்தமோதலில் சுசி(மாமா) (முதலாம் யுனிற், பாவற்குளம்), லெப். குமார் (வைரவ புளியங்குளம், வவுனியா)

மாநாட்டை நடத்தினர்
1978-ல் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாமல் செய்துவிட்டு பிர

தார். மேலும், ஜனாதிபதி பிரேமதாசா பதவி இழப்பது உறுதி என்றார் அவர்.

ஐக்கிய தேசியக்கட்சி பாரா

தாக காமினி திஸநாயக்கா கூறியிருக்கிறார்.

அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்து விட்டதாகவும், பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஒன்பது அமைச்சர்கள் பதவி துறப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றத்திலிருந்து ஒன்பது அமைச்சர்கள் பதவி விலகியுள்ளதாக கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய முன்னாள் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பெரும்பான்மை வலுவை இழந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

# தவறுதலாக 3 எம்.பிகள் கையொப்பம் இட்டனராம்

(கொழும்பு)

ஆயுதப்படையினர், பொலிஸ், அரச உயர் அதிகாரிகள், அமைச்சரவை என்று அனைத்து தரப்பினரும் தம்மை ஆதரிப்பதாக ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார். மேலும் ஜனாதிபதி பிரேமதாசாவை பதவி விலகக் கோரும் மனுவை, தவறுதலாக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கக்கூடாது எனக் கோரும் மனுவாகக் கருதியே சில ஆளும்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டதாக தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு தெரியாத்தனமாகக் கையெழுத்திட்ட மூன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டு ஜெனிவாவில்?

(லண்டன்)

அரசியல்அடைக்கலம் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டனை விட்டு வெளியேறிய திரு. கிட்டு தற்போது ஜெனிவாவில் தங்கியிருக்கக் கூடும் என்று நேற்றிரவு பி.பி.ஸி. கூறியது.

# மேலும் பலர் ஆதரவளிக்கலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிராக முன்னதாகக் கையொப்பமிடாத ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க முன்வந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உயிர்த்த மனிதரின் கூத்து

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக ஆதரவில் நாடக அரங்க கல்லூரி வழங்கும் 'உயிர்த்த மனிதரின் கூத்து' நாடகம் பல மேடைகளில் அரங்கேற உள்ளது.

எதிர்வரும் மாதம் 2 ஆம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தவறானது

(யாழ்ப்பாணம்)

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணசபை பதவி வெற்றிடம் சம்பந்தமான அறிவித்தலில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருக்கும் ஜே. 406 கற்கோவளம் கிராமசேவையாளர் பிரிவு வெற்றிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது தவறானது என்று அரசாங்க அதிபர் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கிராமத்தைவிட்டு வெளியேறினர்.

மண்டைதீவுக் கடற்பரப்பில் நேற்றுக் காலை சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான பல கப்பல்களைக் காணக் கூடியதாக இருந்தது. இதில் ஒரு பெரிய கப்பலும், ஐந்து பீரங்கிப் படகுகளும், நான்கு விசைப்படகுகளும் காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரித்து நின்ற இப் பீரங்கிப் படகுகளில் இருந்து திடீரென மண்டைதீவிலுள்ளகுடிமனை

# பாவற்குளத்தில் மோதல்; இரு புலிகள் வீரமரணம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் பகுதியில் இருக்கும் ஆவரம்துலா என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா ஆயுதப் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர். இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரிய வரவில்லை.

இந்தமோதலில் சுசி(மாமா) (முதலாம் யுனிற், பாவற்குளம்), லெப். குமார் (வைரவ புளியங்குளம், வவுனியா) ஆகிய இருவருமே வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவர்களாவர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# கொலைக் குற்றத்திற்காக மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

ஓமந்தையில் மக்கள் முன்னிலையில் வைத்து சுதன் என்பவருக்கு மரண தண்டனை நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 23-08-91 அன்று மினிபஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்த நவரத்தினம் (50 வயது) என்பவரை தாக்கியதில் அவர் மரணமடைந்தமை தெரிந்ததே. அச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இயக்க உறுப்பினர் சுதன், மற்றும் இயக்க ஆதரவாளர் ஒருவர் என இருவரும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக மன்னிப்புக் கோருகிறோம் என்ற தலைப்பில் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் முழு விபரம் வருமாறு.

தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது மக்களது விடுதலையையே நோக்கமாகக் கொண்டது எமது மக்களது தாயக மீட்பை, அவர்களது சுபீட்சமான வாழ்வையே இலட்சியமாகக் கொண்டது எமது இயக்கம்.

எமது மக்களது சுதந்திரப் போராட்டத்தின் ஒரு கருவியாகவே எமது மக்களிலிருந்தே இன்று நாம் காணும் விடுதலைப்படை உருவானது. இன்று உருவாகிவரும் தமிழர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 12 மணித்தியாலம் தொடர்ந்து குண்டு வீச்சு

(நாயாறு)

சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் காட்டுப்பகுதியில் பன்னிரண்டு மணிநேரத்திற்கு மேலாக தொடர்ச்சியான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் காலை 6·00மணிக்கு நாயாறு கொக்குத்தொடுவாய் பகுதிகளில் உள்ளகாட்டுப்பகுதியை வட்டமிட்ட நான்கு பொம்பர்கள் இரண்டு வை-12 ஒரு ஹெலி ஆகியன தொடர்ச்சியாக கண்மூடித்தனமான குண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

# தனிமனித சர்வாதிகாரத்திற்கு எதிரான போர் —சிறிமா

(கொழும்பு)

இது ஜனாதிபதிக்கு எதிரான போர் அல்ல. தனிமனித சர்வாதிகாரத்தை ஒடுக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்தப்படும் போர் என சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விட்டதாகத் தெரிவித்த சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்திற்கு பிரேரணை வருமாயின் மூன்றில் இரண்டுபங்கு வாக்குகள் பெற்று பிரேரணை நிறைவேறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

# கடற்படையின் சூட்டிற்கு ஒருவர் பலி; ஒருவர் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கடலில் கட்டு மரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இருமீனவ இளைஞர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றவர் பலத்த தாக்குதல்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர்தப்பியுள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை பருத்தித்துறையைச் சேர்ந்த யோகராஜா செல்வச்சோதி (வயது 18), சுப்பிரமணியம் ஜெயேந்திரன் (வயது 19) ஆகிய இரு மீனவ இளைஞர்களும் வெவ்வேறு கட்டு மரங்களில் மீன்பிடித் தொழிலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈ. பி. ஆர். எல். எவ் எதிரணிக்கு ஆதரவு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து நீக்க முயலும் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ் கட்சி கூறியுள்ளது.

# புலிகளின் காவலரணை அழிக்கும் முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் காவலரணை அழிக்கும் முயற்சியில் முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடுந்தாக்குதலை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இராணுவம் முகாமிற்குள் முடங்கியது.

நேற்றுமுன்தினம்இரவு 8 30 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் காவலரணை நோக்கி முன்னேற முற்பட்டபோது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் உக்கிரத்தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் தாக்குதலை எதிர்த்து முன்னேற முடியாத நிலையில் இராணுவம் தமது முயற்சியை

(4ஆம் பக்கம் பார்க்க)

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும்
எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை - 1991

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் எழுதுனர் தரங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் / ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து திறமை அடிப்படையிலும், இன விகிதாசாரப் பிரகாரமும் பொருத்தமானவர்கள் அரசாங்க சேவையிலும், மாகாண சேவையிலும் உள்ள பதவிகளுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும் இப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி எல்லா வெற்றிடங்களையுமோ அல்லது எவற்றையேனும் நிரப்பாது விடும் அதிகாரம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குண்டு இந்நியமனங்கள் நிரந்தரமாக்கப்படமாட்டா. நிரந்தர நியமனம் பெற விரும்புவோர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பின்வரும் ஆவணங்கள் மூலம் விண்ணப்பதாரர் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்று கருதப்படுவர்.

(1) விண்ணப்பதாரரின் பிறப்பு சான்றிதழின்படி அவர் யாழ். மாவட்டத்தில் பிறந்தவரென்று குறிப்பிட்டிருத்தல வேண்டும்.

அல்லது

(2) தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் க.பொ த (சாதாரணம்) அல்லது தே பொ.க சா. பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தைப்போல் தயாரித்து விண்ணப்பிக்க வேண்டும்.

## 4. தகைமைகள்

எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம். மொழி/ இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் (சாதாரணதரப்) பரீட்சை/ தேசிய பொதுக்கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி (மேலே குறிப்பிட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4B தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5 க்கு குறையாத பாடங்களில சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6 ஆம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்)

விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜைகளாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும் நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும். வயது:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 5. பரீட்சைத்திட்டம்

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

(I) மொழித்தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலயம்)
பல்விருப்பு தேர்வுப் புறப் பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று, இது தொடர்புடைய மொழித்தேர்ச்சிகளை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(II) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்)
பல்விருப்புத் தேர்வுப் புறபொருள்சார் வகை வினாத்தாள், இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.
இப்பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடாத்தப்படும் (தமிழ்/ஆங்கிலம்/ சிங்களம்)

## 6. பரீட்சைக் கட்டணங்கள்

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக யாழ். அரசாங்க அதிபரென

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**அரசாங்க சேவையிலும், மாகாணஅரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை- 1991**

1. (1) முழுப்பெயர்:-
(11) முதலெழுத்துகளுடன் பெயர்:-
(திரு/ திருமதி/ செல்வி.)
2. நிரந்தர முகவரி:-
3. பால்:- (ஆண்/ பெண்)
4. நீர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி:-
(தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம்)
5. இனம்:-
(இலங்கைத் தமிழர்/ சிங்களவர்/ முஸ்லீம்கள்/ இந்தியத் தமிழர்/ பறங்கியர்/மலாயர்/ பிறர்)
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
7. (அ) பிறந்த திகதி:-
வருடம்- மாதம்- திகதி-
(ஆ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முடிவுத்திகதியன்று (30.9.1991)
உமது வயது-
வருடம்- , மாதம்- நாள்-
8. கல்வித்தகைமைகள்-
(அ) க.பொ.த (சாதாரணம்)/ தே. பொ.க. சான்றிதழ் பரீட்சை-

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம். | பரீட்சை நிலையம் | பாடம் | தரம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|---|
| [1] | | 1. | | |
| | | 2. | | |
| | | 3. | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| (2) | | | | |

(ஆ) க பொ த. (உயர்தரம்)பரீட்சையின் விபரம்

| பரீட்சையின் பெயர் | பாடம் | தரம் | சுட்டி இல. |
|---|---|---|---|
| | 1. | | |
| | 2. | | |
| | 3. | | |
| | 4. | | |

9. பிறந்த இடமும், மாவட்டமும்:-
10. ஆரம்பக்கல்வி தொடக்கம் க. பொ. த.(சாதாரண)/ தே. பொ. க. சா. பரீட்சைவரை கல்வி கற்ற பாடசாலையின் பெயர்:-


## வரி விளம்பரம்

**O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு**

விஞ்ஞானம், கணிதம். ஆகிய பாடங்களுக்குரிய பகுதி 1+11 வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BOND புத்தகநிறுவனம், 58A. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(B/2984)

**ஆண்டு - 5 (புலமைப்பரிசில்)**

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். BOND புத்தகநிறுவனம். 58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
(B-2983)


# நினைவு கூருகின்றோம்...

1991 - 08 - 31





கப்டன்

## ஆனந்தன் நெடுமாறன்

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் மேசைக்கல்திடல் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய
லெப். றமேஷ் (தம்பிராசா மேகநாதன் - வேப்பவெட்டுவான், செங்கலடி, மட்டக்களப்பு)
கோண்டாவில், காரைக்கால் பகுதியில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
செந்தில் (பாலசுப்பிரமணியதேசிகர் செல்வசெந்தில் - கோப்பாய்)
முல்லைத்தீவில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவமனை ஊழியரான தமிழ்ப்

(I) மொழித்தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலயம்)
பல்விருப்பு தேர்வுப் புறப் பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று, இது தொடர்புடைய மொழித்தேர்ச்சிகளை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(II) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்)
பல்விருப்புத் தேர்வுப் புறபபொருள்சார் வகை வினாத்தாள், இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.
இப்பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடாத்தப்படும் (தமிழ்/ஆங்கிலம்/சிங்களம்)

## 6. பரீட்சைக் கட்டணங்கள்

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக யாழ். அரசாங்க அதிபரென 100/-க்கான காசுக்கட்டளையை அல்லது யாழ். செயலகத்திலோ அல்லது யாழ். செயலகத்தினால் குறிக்கப்பட்ட வங்கியொன்றிலோ பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப் பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

## 7. சம்பளத்திட்டம்

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 சதம் என்ற விகிதத்தில் வேதனமும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்'' என்பதைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

பூரண விபரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தில் உள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்கப்பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, படைத்தரங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி, ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவிற்கு குறையாத திரட்டிய சம்பளம் பெறுபவரும் அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவருமானவொருவர்.

9. விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 1991 செப்ரம்பர் 30ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபர்/மாவட்ட ஆணையாளர்,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

பரீட்சைத் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும். அரசாங்க அதிபரின் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் கொடுக்கப்படாத எந்த விடயமும் நியமிப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும்.

**கா. மாணிக்கவாசகர்**
யாழ். அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.
(B/3030)

| பெயர் | | | இல. |
|---|---|---|---|
| | 1. | | |
| | 2. | | |
| | 3. | | |
| | 4. | | |

9. பிறந்த இடமும், மாவட்டமும்:-
10. ஆரம்பக்கல்வி தொடக்கம் க. பொ. த.(சாதாரண)/ தே. பொ. க. சா. பரீட்சைவரை கல்வி கற்ற பாடசாலையின் பெயர்:-
11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:-
12 ஏனைய தகைமைகள்;-
13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம் / இல்லை (ஆம் என்றால் விபரங்களைக் குறிப்பிடவும்.)
14. விண்ணப்பதாரியின் உறுதி மொழி:-
(அ) எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் பொய்யானவையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன்/ஆட்சேர்ப்பின் பின் நான் தகைமை யற்றவராக கொள்ளப்படலாம்/சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்
(இ) இப்பரீட்சையின் பிரமாணங்களுக்கமைந்து நடக்க நான் இணங்குகின்றேன்.
15. கொடுப்பனவு காசுக் கட்டளை அல்லது பற்றுச்சீட்டு இலக்கம் (பற்றுச் சீட்டு அல்லது காசுக் கட்டளையை இணைக்கவும்.)

திகதி:-
.................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

## விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி

இவ் விண்ணப்பத்தை அனுப்பும் ........................ என்பவரைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், என் முன்னிலையில் 1991.......... ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவி முத்திரை

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-
பதவி:-
முகவர்:-
திகதி:-

# ஆனந்தன் நெடுமாறன

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் மேசைக்கல்திடல் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய
**லெப். றமேஷ்** (தம்பிராசா மேகநாதன் - வேப்பவெட்டுவான், செங்கலடி, மட்டக்களப்பு)

கோண்டாவில், காரைக்கால் பகுதியில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
**செந்தில்** (பாலசுப்பிரமணியதேசிகர் செல்வசெந்தில் - கோப்பாய்)

முல்லைத்தீவில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவமனை ஊழியரான தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் இந்தியப் படையினரின் 'பரா' அதிரடிப் படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய
**கப்டன் நெடுமாறன்** (வைத்திலிங்கம் கணேசநாதன் - மயிலிட்டி)

ஆவரங்காலில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட புத்தகலட்டியைச் சேர்ந்த தமிழ் விவசாயி

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**லெப். ராசா** (அமிர்தலிங்கம் சிவயோகநாதன் - கொக்குத்தொடுவாய்)
**லெப். அன்பு** (தியாகராசா சிறீகாந்தன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)
**கவி** (அந்தோனிப்பிள்ளை அருள்நாயகம் - ஆலையடி, திருநகர், கிளிநொச்சி)

புங்குடுதீவில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த வாகன விபத்தில் எமைப்பிரிந்த
**சீனு** (தோமாசிங் சேர்ச்சில் - 4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய
**பவான்** (இராசன் இராசகுமார் - புன்னாலை தெற்கு, கரவெட்டி)

மண்டைதீவில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினர் ஏவிய எறிகணை யாழ். கோட்டைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் வீரமரணமெய்திய
**ஆனந்தன்** (முத்துக்கிருஷ்ணன் குணாளன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(B/3032)

# புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு

சிந்தனைக்கு

தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்

— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 31-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 3208
த. பெ. எண் 65

## உறங்கிக் கிடந்த எரிமலை வெடித்தது

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இழைத்த குற்றத்திற்காக அவர் மீது ''இம்பீச்மென்ட்'' - பழிமாட்டறைதல் - நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சிறிலங்கா எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியில் ஒரு பகுதியினரும் கொண்டு வந்த பிரேரணை அங்கு பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பிரேரணை கொண்டு வருவது புதுமையான விடயமல்ல. எதிர்க்கட்சியுடன் இணைந்து ஆளும் ஐ.தே.கட்சியின் ஒரு பகுதியினரும் சேர்ந்து இக்குற்றச்சாட்டை வெளியிட்டமையே அரசியல் கொந்தளிப்பிற்கான காரணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக வெடித்துக் கிளம்பியுள்ள எதிர்ப்பானது அண்மைய நிகழ்வுகளில் ஏற்பட்டதொன்றன்று. நீண்ட காலமாக உறங்கி கிடந்த நிகழ்வுகளின் வெளிப்பாடாகும். ஐ.தே.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக பிரேமதாசா நியமிக்கப்பட்டபோதே இவ்வெடிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அன்றைய அரசியல் சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆகையினால் அன்று வெடிக்காமல் உறங்கிப்போன எரிமலையாக இருந்த பிரச்சினை தற்பொழுது வெடித்துள்ளது.

இந்த எரிமலை அப்பொழுது வெடிக்காமல் அடங்கிப் போனபோது அதனை உறைந்து போகவிடாமல் செய்தவர் பிரேமதாசா அவர்களே. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தனக்கு எதிரானவர்களை எல்லாம் ஓரம் கட்டினார், அல்லது ஒதுக்கினார். இதில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவில் இருந்து அவரது அமைச்சரவையில் முக்கிய பங்கு வகித்த காமினிதிஸநாயக்க, ரொனிடிமெல் போன்றவர்கள் பழிவாங்கப்பட்டார்கள். அமைச்சர் லலித்அத்துலத்முதலியும் ஓரம் கட்டப்பட்டார் என்றே சொல்ல வேண்டும். இந்நிலையானது எரிமலை உறங்கிக்கொண்டிருப்பினும் கொதிநிலையில் இருப்பதற்கே வழிவகுத்தன. இந்நிலை தற்போது வெடித்துச் இருக்கிறது.

இனி இன்றைய உலக நிலைவரத்தை நோக்குவோம். கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்கா அதில் வெற்றிபெற்றுள்ளது. அவ்வாறு தாம் அதில் வெற்றி பெற்றுள்ளதாக புஷ் கூறுகின்றார். வார்சோவின் இராணுவக் கூட்டு கலைக்கப்பட்டுள்ளது. சோவியத்யூனியன் நேட்டோவில் சேர விருப்பம் தெரிவித்துள்ளது. உண்மையான அர்த்தத்தில் இன்று உலகில் நேட்டோ எனும் ஒரே ஒரு இராணுவக் கூட்டே உள்ளது. ஆசியானை (Asean) இராணுவ அர்த்தத்தில் நாம் கணக்கில் எடுக்கமுடியாது. பொதுவாக உலகின் நாடுகளிடையேயான உறவு நிலை குழம்பியுள்ளது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் செய்வதறியாது நிலை தடுமாறி நிற்கின்றன. அமைப்பு ரீதியாகவும் (நேட்டோ என்ற வகையில்) தனிப்பட்ட ரீதியாகவும் அமெரிக்காவின் கையே இன்று உலகில் ஓங்கியுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் (Developed Countries - DC) அதிக வளர்ச்சியடைந்த நாடுகள் (Highly Developed Countries H DCS) என்ற நிலையை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளன. மூன்றாம் உலக நாடுகளில் ஒரு பகுதி புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகளாக (Newly Industrializing Countries-NICS) மாறுகின்றன. மேற்கு - மேற்கு உறவு, கிழக்கு-மேற்கு உறவு, வடக்கு-தெற்கு உறவு, தெற்கு-தெற்கு உறவு என்ற நிலைவரங்கள் உள்ளன.

பல அரசுகளை விடவும் சக்திவாய்ந்தவையாக உள்ள பல்தேசிய கொம்பனிகள், தேசிய எல்லை கடந்த வங்கிகள் (Transnational Banks) சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி போன்ற நிறுவனங்கள் சர்வதேச அரசியற் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடியவையாக உள்ளன. பல்தேசிய நிறுவனங்களுடன் அரசுகள் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. அரசுகளை பல்தேசிய நிறுவனங்கள் ஆள்கின்றன.

இந்நிறுவனங்களைத் தவிர்த்து ...

... பதை வேதனையுடன் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. கி. பி. 16-ம் நூற்றாண்டைத் தொடர்ந்து உலகம் என்னும் ஒரு பொதுத்தன்மையை ஐரோப்பியரே உருவாக்கினர். அன்றிலிருந்து இன்றுவரை உலக அரசியல் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் சக்தியாக அவர்களே உள்ளனர். எப்படியோ சர்வதேச அரசியல் என்பது ஐரோப்பிய- அமெரிக்க மைய அரசியல்தான் என்று பெருமளவு சொல்லலாம்.

சர்வதேச அரசியலில் தாக்கம் விளைவிக்கக் கூடிய முக்கிய அரசியற் பிராந்தியங்களை இனங் காண்போம். அவையாவன வடஅமெரிக்கா, மேற்கைரோப்பா, கிழக்கைரோப்பா, கிழக்காசியா, மேற்காசியா, தென்னாசியா என்பனவாகும். வட அமெரிக்கா-இது அரசியல் சுதந்திரத்தன்மை மிக்க பிராந்தியமாகும் ஏறக்குறைய முதலாம் உலகமகாயுத்தத்தின் பின்பு இப்பிராந்தியத்தில் வெளிச்சக்திகள் எதுவும் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. இப்பிராந்தியத்திலுள்ள ஓர் அரசாகிய ஐக்கிய அமெரிக்கா மாபெரும் வல்லரசு ஸ்தானத்தில் உள்ளது. மேற்கைரோப்பா-இரண்டாம் உலகமகாயுத்தத்துக்கு பிற்பட்ட காலத்திலிருந்து இற்றைவரை அரசியல் ஸ்திரத்தன்மை உள்ள பிராந்தியமாகும் ஐ.நா. சபையில் வீட்டோ அதிகாரம்கொண்ட இரண்டு நாடுகள் இப்பிராந்தியத்தில் உள்ளன.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் போன்ற பொருளாதாரக் கூட்டுக்களையும், நேட்டோ போன்ற இராணுவக் கூட்டினையும் கொண்ட பிராந்தியமாகும். உலக அரசியலில் இப்பிராந்தியத்துக்கென சில சிறப்பான செல்வாக்குகள் உண்டு.

கிழக்கைரோப்பா - இரண் ...

நாடு இந்தியா. இது பிராந்திய வல்லரசாக நிமிர எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை இப்பிராந்தியத்தில் அரசியல் ஸ்திரப்பாடு உறுதியானதாய் இருக்கிறது என்று சொல்வது கடினம். இப்பிராந்திய நாடுகளிடையேயான உறவு சீருள்ளதாய் இல்லை. இப்பிராந்திய நாடுகளின் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சினைகள் கொந்தளிப்பானவை.

கிழக்காசியா - இப்பிராந்தியம் அரசியல் ஸ்திரத்தன்மை மிக்க பிராந்தியமாகும். இங்கு பிரதானமாக இரண்டு முக்கிய அரசுகள் உள்ளன. சீனா சோஷலிஸ அரசமைப்பின் மீது நம்பிக்கை கொண்ட நாடு. உலகிலே மிகப்பெரும் சனத்தொகையைக் கொண்ட

(பகுதி 3)

நாடும் இதுவாகும். கணிசமான அளவு அரசியல், பொருளாதார, இராணுவப் பலம் இதனிடமுண்டு. இப்பிராந்தியத்திலுள்ள அடுத்த நாடாகிய ஜப்பான் பொருளாதாரம், தொழில்நுட்பம் என்பனவற்றில் மிகப்பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. இதனிடம் இராணுவப்பலம் இல்லை. இது இன்று பொருளாதார வல்லரசாக வர்ணிக்கப்படும் நாடாக உள்ளது.

வட அமெரிக்கா மேற்காசியா, கிழக்காசியாவில் ஜப்பான் ஆகிய பகுதிகள் அமெரிக்காவின் தலைமைக்கு உட்பட்டவையாக உள்ளன. அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படக் கூடியளவு போட்டியும் வேறுபாடும் இருக்கின்ற போதிலும் ஜப்பான் இன்று அமெரிக்காவின் தலைமைக்கு கீழ் இயங்கும் நாடாகவே உள்ளது.

கிழக்கைரோப்பா அமெ ...

மாவீரர் கப்டன் ஹீரோராஜின் நினைவாக மு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்ட ''புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு'' நூலின் முதலாம் இரண்டாம் பகுதிகள் கடந்த இரு வெள்ளிமஞ்சரிகளில் வெளியாகின. பகுதி 3 இன் ஒரு பகுதி இவ் இதழில் வெளியாகிறது

னும் அதனைச் சமாளிப்பதற்கான பல்வகை முயற்சிகளை அமெரிக்கா செய்தும் வருகின்றது. ஆனால் கிழக்காசியாவில் சீனாதான் அமெரிக்காவுடன் முரண்டு பிடிக்கக்கூடிய அல்லது நீண்டகாலப் போக்கில் அமெரிக்காவிற்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது. எனவே இன்றைய நிலையில் பார்த்தால் ஏனைய பிராந்தியங்களைவிட கிழக்காசியாவை எண்ணித்தான் அமெரிக்கா அச்சமடையவேண்டிய நிலை ஓரளவு தெரிகிறது.

பிராந்திய ரீதியாக பார்த்தால் அமெரிக்காவின் கை தூக்கலாகவே உள்ளது. பிராந்திய அரசுகளை தனக்கிசைவாக கையாளுவதிலேயே மேலும் அமெரிக்காவின் மூலம் தங்கியும் உள்ளது.

அடுத்து உலகிலுள்ள பிரதான அரசுகளை மட்டும் கணக்கிலெடுப்போம். அவையாவன அமெரிக்கா, சோவியத்யூனியன், சீனா, இந்தியா ஜேர்மனி, ஜப்பான், என்பன அதேவேளை ஓர் அரசாக இணையக்கூடிய அடிப்படைத் தன்மை கொண்ட பிராந்தியங்களாக இரண்டை கருத்தில் எடுத்து நோக்கலாம். ஒன்று மேற்காசியா, இங்கு ஒரு பொது மதம் தொடர்ச்சியான பிரதேசமும் உண்டு. ஆயினும் இதனைஓர் அரசாக இணையவிடாது தடுத்து வைப்பதில் மேற்குலகம் இதுவரை வெற்றியடைந்து வருகிறது. அண்மைத் தசாப்தத்தில் இணையக் கூடியதற்கான சாத்தியக் கூறுகள் தெரியவில்லை. அடுத்து ஐக்கிய ஐரோப்பா அரசு பற்றியது. ஐக்கிய ஐரோப்பிய அரசு உருவாகுமேயானால் அதுவே உலகின் மிகச் சக்திவாய்ந்த அரசாக இருக்கும். முழு ஐரோப்பாவும் ஐக்கிய அரசாக உருவாவதை அமெரிக்கா விரும்பாது. எப்படியும் அதனைத் தடுக்கவே அமெரிக்கா முயலும் ஆனால் மேற்கைரோப்பா ஓர் அரசாக இணைவதற்குரிய அடிப்படை சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆயினும் கிட்டிய அண்மைக் காலத்தில் நாம் அதனை எதிர்பார்க்க முடியாது தற்போதைய நிலை ...

...போது அதனை உறைந்து போகவிடாமல் செய்தவர் பிரேமதாசா அவர்களே. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தனக்கு எதிரானவர்களை எல்லாம் ஓரம் கட்டினார், அல்லது ஒதுக்கினார். இதில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவில் இருந்து அவரது அமைச்சரவையில் முக்கிய பங்கு வகித்த காமினிதிஸநாயக்க, ரொனிடிமெல் போன்றவர்கள் பழிவாங்கப்பட்டார்கள். அமைச்சர் லலித்அத்துலத்முதலியும் ஓரம் கட்டப்பட்டார் என்றே சொல்ல வேண்டும். இந்நிலையானது எரிமலை உறங்கிக்கொண்டிருப்பினும் கொதிநிலையில் இருப்பதற்கே வழிவகுத்தன. இந்நிலை தற்போது வெடித்துச் சிதறியுள்ளது.

சிறிலங்காவில் அரசியல் பழிவாங்கல்களுக்கும், மிரட்டல்களுக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளை அரசியல்வாதிகள் பயன்படுத்துவதை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தொடக்கி வைத்தார். அதனை தற்போதைய ஜனாதிபதி அவர்களும் தொடர்ந்தார். ஆனால், அந்த வடிவமே தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதியை பதவியில் இருந்து விலக்க வேண்டும் எனக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அவரைப் பதவியில் இருந்து நீக்குமா? இல்லையா என்பதைவிட ஐ. தே. கட்சி அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது என்பது மட்டும் உண்மை.

தற்பொழுது வரும் செய்திகளின்படி எதிராக உள்ள சுமார் 125 எம்.பிகள் மட்டுமே வாக்களிப்பார்களானாலும் அரசாங்கம் தனது பெரும்பான்மையை இழந்து விடுகின்றது. இதனால் அரசாங்கத்தால் செயற்பட முடியாத ஒரு அவலநிலையும் உருவாகி விடும். அமைச்சரவையும் இயங்க முடியாது போய்விடும்.

சிறிலங்காவின் ''சுதந்திர அரசியல் வரலாற்றில்'' இதுவரை ஆளும் கட்சிகள் எவையும் இவ்வாறானதொரு அரசியல் நெருக்கடியைச் சந்திக்கவில்லை என்றே சொல்லலாம். அத்தோடு ஐ.தே.கட்சியும் தனது வரலாற்றில் இவ்வாறானதொரு அரசியல் நெருக்கடியை சந்திக்கவில்லை. இந்த அரசியல் நெருக்கடி தீவிரமடையுமானால் பதின்நான்கு வருட ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆட்சி முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகும். அத்தோடு ஐ.தே.கட்சியும் இரண்டாகப் பிளவுபடுவதும் மூன்றாவது பலம் பொருந்திய சக்திஒன்று திட்டவட்டமாக உருவாகும் என்றும் கூறலாம்.

கள் (Transnational Banks) சர்வதேச நாணய நிதியம் (MF) உலக வங்கி போன்ற நிறுவனங்கள் சர்வதேச அரசியற் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடியவையாக உள்ளன. பல்தேசிய நிறுவனங்களுடன் அரசுகள் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. அரசுகளை பல்தேசிய நிறுவனங்கள் ஆள்கின்றன.

இந்நிறுவனங்களைத் தவிர்ந்த அமைப்புக்களை எடுப்போம். நேட்டோ அமைப்பு. போட்டியற்ற உலகிலுள்ள ஒரு தனிப்பெரும் இராணுவக் கூட்டமைப்பு அணிசாரா அமைப்பு. இது என்று தடுமாறி நிற்கிறது. புதிய சூழலுக்கு ஏற்ப தனக்கென புதிய உத்திகள் எதனையும் வகுக்காது இருக்கின்ற அமைப்பு, அடிப்படையில் இது செயற்றிறன் அற்ற அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை இதிலுள்ள பலம் பொருந்திய அங்கம் பாதுகாப்புச்சபையே. பாதுகாப்புச் சபையிலுள்ள அதிவிசேட சிறப்பம்சம் வீட்டோ எனப்படும் இரத்ததிகாரம். இது ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு மட்டுமே உண்டு. இதில் சீனா தவிர்ந்த ஏனைய நான்கு நாடுகளும் ஐரோப்பிய - அமெரிக்க நாடுகள் (Euro - American Countries) உண்மையில் ஐ.நா. சபை என்பது ஐரோப்பிய-அமெரிக்க சபை தான் ஐ.நா. சபையில் தென்கோளத்திற்கு உள்ள ஒரே ஒரு ஒளிக்கீற்று சீனாவிடமுள்ள வீட்டோ அதிகாரம் தான். அந்த வீட்டோவின் மூலம் தென்கோளத்தை சீனா பிரதிநிதித்துவப் படுத்துமா? ஈராக் பிரச்சினையில் அமெரிக்காவிற்கு எதிராக சீனா தனது வீட்டோவைப் பிரயோகிக்கவில்லை. அல்லது பிரயோகிக்கமுடியவில்லை

பொதுவாக சர்வதேச அரசியல் என்பது ஐரோப்பிய அமெரிக்க அரசியல் தான்என்

பகுதி 3 இன் ஒரு பகுதி இவ் இதழில் வெளியாகிறது

ஐரோப்பிய பொருளாதார சமூகம் போன்ற பொருளாதாரக் கூட்டுக்களையும், நேட்டோ போன்ற இராணுவக் கூட்டினையும் கொண்ட பிராந்தியமாகும். உலக அரசியலில் இப்பிராந்தியத்துக்கென சில சிறப்பான செல்வாக்குகள் உண்டு.

கிழக்கைரோப்பா - இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு பிற்பட்ட காலத்திலிருந்து இப்பிராந்தியம் சோவியத் யூனியனின் ஆளுகைக்கு உட்பட்ட பிராந்தியமாய் இருந்தது. ஆயினும் இன்று சோவியத்தின் பிடி கணிசமானளவு இங்கு தளர்ந்துள்ளது. இராணுவப் பரிமாணத்தில் மட்டும் அமெரிக்காவிற்கு ஈடுகொடுக்கக் கூடிய வலு ஏறக்குறைய சோவியத் யூனியனுக்கு உண்டு. அதேவேளை பொருளாதாரம், தொழில்நுட்பம் என்பனவற்றில் வட அமெரிக்கா, மேற்கைரோப்பா, கிழக்காசியாவில் ஜப்பான் ஆகியவற்றை விடவும் கீழ்ப்பட்ட நிலையிலேயே இப்பிராந்தியம் உள்ளது.

மேற்காசியா - இது பெருமளவிற்கு ஒரே இனம் மதம், மொழியைக் கொண்ட பிராந்தியம். இது எண்ணெய்வளம் மிக்க பிராந்தியம் இங்கு அரசியல் கொதிநிலையும், கொந்தளிப்பும் உண்டு. இப்பிராந்தியத்திற்கு தலைமை தாங்கும் இப்பிராந்திய நாடு இங்கில்லை. அரபு இஸ்ரேலிய பிரச்சினை இப்பிராந்தியத்தின் பிரதான பிரச்சினைகளுள் ஒன்றாகும். இன்று இப்பிராந்தியம் அமெரிக்காவால் தோற்கடிக்கப்பட்ட ஒன்றாகவோ அல்லது ஏதோ ஒரு விதத்தில் அமெரிக்க ஆளுமைக்குக் கீழ்ப்பட்ட ஒன்றாகவோ உள்ளது.

தென்னாசியா - இப்பிராந்தியத்திலுள்ள மிகப் பெரிய பட்டவையாக உள்ளன. அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படக் கூடியளவு போட்டியும் வேறுபாடும்இருக்கின்ற போதிலும் ஜப்பான் இன்று அமெரிக்காவின் தலைமைக்கு கீழ் இயங்கும் நாடாகவே உள்ளது.

கிழக்கைரோப்பா அமெரிக்காவுடன் போட்டியிட முடியாமல் தனது 'சுடும்போக்கைத் தளர்த்திக் கொண்டுள்ளது ஏறக்குறைய அமெரிக்காவுடன் இராணுவ சமபலத்தைக் கொண்ட நாடாக சோவியத் யூனியன் உள்ள போதிலும் அது அமெரிக்காவிடம் தயவு கோரும் நிலையிலேயே இன்றுள்ளது. இப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளில் அரசியல் ரீதியாக அமெரிக்காவின் கை சற்று ஓங்கியுள்ளது.

மேற்காசியா இன்று பெருமளவுக்கு அமெரிக்காவால் தோற்கடிக்கப்பட்டு ஏதோ ஒரு வகையில் அதன் ஆணைக்கு உட்பட்ட பிராந்தியமாக உள்ளது.

தென்னாசியாவில் அமெரிக்காவிற்கு கவலைப்பட வேண்டியளவு நிலை இல்லை. அரசியல் ரீதியாக அமெரிக்கா கணிசமான அளவு செல்வாக்கு செலுத்தும் பிராந்தியமாக உள்ளது. இப்பிராந்தியத்தில் தனது நலனுக்கேற்ற தீர்மானம் எடுக்கக் கூடியநிலை அமெரிக்காவிற்கு உண்டு. இப்பிராந்தியம் பற்றி அமெரிக்காவிடம் அதிகளவு அச்சமில்லை.

கிழக்காசியாவில் ஜப்பான் அமெரிக்காவின் தலைமைத்துவத்துக்கு உட்பட்ட நாடாக இருக்கின்றபோதிலும்: பொருளாதாரம், தொழில்நுட்பம் சார்ந்து அதன் மீது அமெரிக்காவிற்கு அச்சமுள்ளது. ஆயி...

... அதுவே உலகின் மிகச் சக்திவாய்ந்த அரசாக இருக்கும். முழு ஐரோப்பாவும் ஐக்கிய அரசாக உருவாவதை அமெரிக்கா விரும்பாது. எப்படியும் அதனைத் தடுக்கவே அமெரிக்கா முயலும் ஆனால் மேற்கைரோப்பா ஓர் அரசாக இணைவதற்குரிய அடிப்படை சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆயினும் கிட்டிய அண்மைக் காலத்தில் நாம் அதனை எதிர்பார்க்க முடியாது தற்போதைய நிலையைக் கொண்டு பார்க்கும் போதோ அல்லது வரப்போகும் அண்மைக்கால (இந்தத் தசாப்தத்தில்) நிலைமையைக் கொண்டு பார்க்கும் போதே அரசுகள் என்ற வகையில் அமெரிக்காவே பலம் வாய்ந்தாக உள்ளது. முழு ஐரோப்பாவுமாக இல்லாமல் மேற்கைரோப்பா மட்டும் ஓரரசாக மாறுமானால் அது அமெரிக்காவின் வல்லுவுக்குப் பாதகமாய் இருக்குமென்றில்லை. எவ்வாறாயினும் இப்போது அமெரிக்காவின் கையே பெரிதாகத் தெரிகிறது. சூலைந்திருக்கின்ற இன்றைய சர்வதேச சூழலைப் பயன்படுத்தி அமெரிக்கா உலகளாவிய ரீதியில் தனது தலைமையை நிலைநிறுத்த விரும்புகிறது. இதற்கான வாய்ப்புக்கள் எவ்வளவு? இதற்கான அமெரிக்காவின் திட்டமென்ன? அமெரிக்காவால் இது முடியுமா?

[தொடரும்]

## விபத்தில் காயம்

சாவகச்சேரி)

மதுபோதையில் சைக்கிளோடிய நபர் ஒருவர் வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார். கடந்த புதன் கிழமை சாவகச்சேரி பகுதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மல்லாவியைச் சேர்ந்த ச. தவநாயகம் (வயது 42) என்பவரே வாகனம்ஒன்றுடன் மோதிப் படுகாயமடைந்தார்.

# ஐ. நா. சபை சாசனம் மாற்றிஅமைக்கப்படவேண்டும்

## - இந்திய வெளிவிவகார அமைச்சர்

(டில்லி)

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தியா வற்புறுத்தியுள்ளது. இந்திய தலைநகர் புதுடில்லியில் கருத்தரங்கொன்றை தொடக்கி வைத்துப் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளின் வெளியுறவுக் கொள்கை நோக்கங்களுக்கு ஏற்ப. ஐ. நா. செயற்படும் ஆபத்து இருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்று முடிவுற்ற ஒரு போரில் பங்கேற்ற ஐந்து மேற்கு வல்லரசுகள் கையில் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரங்களை வழங்குவது தற்போதைய சூழ்நிலைக்கு ஒவ்வாது. புது உலக முறைமையை ஏற்படுத்துவதில் அணிசேரா இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். மேலும் அணிசேரா நாடுகளின் இயக்கம் தேவையற்றது என்ற கருத்தை வலியுறுத்துவது மனித குலத்தின் விதியை மேற்கத்தைய நாடுகளிடம் விட்டுவிட வேண்டும் என்று கூறுவதற்கு ஒப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ரங்கனை கைதுசெய்ததாக சி. பி. ஐ. அறிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் உறுப்பினரும் ராஜீவ் காந்தியின் கொலையோடு சம்பந்தப்பட்டவருமாகிய ரங்கன் என்பவரை தாம் கைதுசெய்ததாக மத்திய புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட ரங்கன், சிவராசன் சுபா ஆகியோரின் நெருங்கிய நண்பர் என்றும், இவர் சென்னை அடையாறில் கைதுசெய்யப்பட்டார் என்றும் சிறப்பு புலனாய்வுக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெங்களூரில் கோணனக் குண்டே கிராமத்தில் சிவராசனும் சுபாவும் மறைந்திருந்த போது அவர்களுடன் ரங்கன் தங்கியிருந்தார் என்றும்

அவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அங்கிருந்து தப்பி சென்னைக்கு வந்ததாகவும்,

நேற்று முன்தினம் அடையாற்றில் புலனாய்வு அதிகாரிகளைக்கண்ட ரங்கன் கடையொன்றுக்குள் சென்று சயனைட் அருந்த முற்பட்ட போது அதிகாரிகள் பாய்ந்து அவரைக் கைது செய்ததாக சிறப்புப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தியாகி திலீபன் நினைவு தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பிற்போடப்பட்ட தியாகி திலீபன் நினைவு தடகள போட்டி நடைபெறவுள்ளது. இந்த விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வரும் திங்கட்கிழமை (02-09-91) கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல விளையாட்டு உத்தியோகதர்த்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்கள் ஆகியோரை தவறாது சமுகம் தரும்படியும், வரும்பொழுது வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட சகல விண்ணப்பப்பத்திரங்களையும் கொண்டு வருமாறும் கேட்கப் படுகின்றனர்.


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

(சிவசம்பு ஈசன்)

மட்டுவில் வடக்கு (சாவகச்சேரி) செல்லப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (சிவசம்பு ஈசன்) என்பவர் பிரான்சில் அகால மரணமடைந்துள்ளார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

த. ஆறுமுகம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(R / 1698)


வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

### தவறுதலாக

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கையெழுத்துக்களை நீக்கிக் கொள்ளுமாறு சபாநாயகரிடம் கேட்டிருப்பதாக டெயிலிநியூஸ் பத்திரிகை கூறியுள்ளது. கெக்கிராவ தொகுதி உறுப்பினர் தர்மசேன ஜயசிங்க மாத்தறைத்தொகுதி உறுப்பினர் டி. ஜி. ஜினதாச கேகாலைத் தொகுதி உறுப்பினர் வின்சன்ட் ஜெயவர்த்தன ஆகியோரே தெரியாத்தனமாக கையெழுத்திட்டவர்கள் என டெய்லி நியூஸ் கூறியுள்ளது.

### கடற்படையின்

ஈடுபட்டிருந்தனர். அப்போது

## பிரகடனம்

அஸ்பைஸ ன் குடியரசும் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளது. சோவியத்தில் இருந்து பிரிவதாக சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள எட்டாவது குடியரசு இதுவாகும்.

### கூட்டத்தொடர்

நெருக்கடியைச் சமாளிக்க தக்க நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் தக்க அவகாசம் உள்ளது என்றும் கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

### கொலைக்

தேசிய இராணுவமானது எமது மக்களின் ஒரு அங்கம். அது போராடுவது எம் மக்களின் நலனுக்காகவே. இன்று நூற்றுக்கணக்கான போராளிகள் தம்முயிரை விலையாகக் கொடுத்துக் கேட்பது எமது தாயகத்தையும் எமது மக்களது விடிவையுமே.

கடந்த 23-08-91 அன்று ஓமந்தையில் வைத்து தமிழீழப் பொதுமகன் ஒருவர் (திரு. நவரத்தினம், வயது 50) எமது உறுப்பினர் (சுதன்) ஒருவரால் தாக்கப்பட்டு இறந்துள்ளார். இச் சம்பவத்தில் இயக்க ஆதரவாளர் எனச் சொல்லிக் கொள்ளும் ஒருவரும் ஈடுபட்டுள்ளார். சாதாரண "பிரயாணப் பேருந்தில் இடம் பிடிப்பதில்" ஏற்பட்ட வாக்குவாதமே தாக்குதல் நடவடிக்கைக்கான ஆரம்பமாக அமைந்துள்ளது.

குறிப்பிட்ட குற்றச் செயல் விசாரிக்கப்பட்டு திரு. நவரத்தினம் அவர்களது மரணம் கொலை எனக்கருதி சுதனுக்கு மரணதண்டனையும், சம்பந்தப்பட்ட ஆதரவாளர் எனப்படுபவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கப்படுகிறது.

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக நாம் போராடப் புறப்பட்டோமோ அதே போன்ற அடாவடித்தனமான நடவடிக்கைகளில் எமது உறுப்பினர்கள் ஈடுபட நாம் அனுமதிக்கப்போவதில்லை.

தமிழீழ மக்களின் விடிவுக்காக தம்முயிரைக் கொடுத்த ஆயிரக்கணக்கான போராளிகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் சுதன் போன்ற ஒரு சிலரது நடவடிக்கைக்காக நாம் வெட்கப்படுகிறோம்; வேதனைப் படுகிறோம், எமது மக்


## மரண அறிவித்தல்

### லூயிசா மங்களநாயகம் செல்வரத்தினம்

லூயிசா மங்களநாயகம் செல்வரத்தினம் அவர்கள் 30-08-91 இல் காலமானார். இவர் காலம் சென்ற குலசேகரம் அல்பேட் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியாரும், (Flora) புளோறா, செல்வமணி அஸ்பெரியின் அன்புத் தாயாரும், காலம் சென்ற சாமுவேல் ஜெயசிங்கம் அஸ்பெரியின் அன்பு மாமியாரும் தனபாலன் அஸ்பெரியின் (லண்டன்) பேர்த்தியாரும், காலம் சென்றவர்களான அல்பிறட் இயேசுரநாயகம், அருந்துதி நாயகம், பேசி அதிசயநாயகம் அஸ்பெரியின் அன்புச் சகோதரியும் திலகவதி (லீலா), ஸ்ரான்லி எமேசனின் பெரியதாயாரும் ஆவர்.

இவரின் நல்லடக்க ஆராதனை இன்று மாலை 4 00 மணியளவில் மானிப்பாய், 20 லோட்டன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மகள் F. S. அஸ்பரி

(B/3038)



## 45-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
1971 - 02 - 21



மறைவு
1991 - 07 - 15

### வீரவேங்கை லெஸ்ரன் (அருளம்பலம் தவக்குமார்)

மானிப்பாய்

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை லெஸ்ரனின் செய்தி கேட்டு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட போராளிகளுக்கும் எமக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள், உற்றார், நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய்
மேற்கு

- குடும்பத்தினர்

R/1697

# ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
## ( சிவசம்பு ஈசன் )

மட்டுவில் வடக்கு (சாவகச்சேரி) செல்லப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (சிவசம்பு ஈசன்) என்பவர் பிரான்சில் அகால மரணமடைந்துள்ளார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

த. ஆறுமுகம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(R / 1698)

---

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## யாழ்ப்பாணம் / பேராதனை
# பல்கலைக்கழகம்

கல்விய ண்டு 1991|1992

- கலை முதற்தேர்வு **G A. Q.**
- வர்த்தக முதற்தேர்வு **1st in Com.**
- விஞ்ஞான முதற் தேர்வு **G. S. Q.**

ஆகிய பாடநெறிகளுக்கான பதிவுகளை 10-09-91க்கு முன் பதிவுசெய்து கொள்ளலாம்.

A/L-வில் 3 பாடங்கள் சித்தியெய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

- *விரிவுரைகள் யாவும் 14.09.91 அன்று ஆரம்பமாகின்றன*

விபரங்களுக்கு:

நிர்வாகி,
## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3017)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

நக்கக் கொள்ளுமாறு சபா நாயகரிடம் கேட்டிருப்பதாக டெயிலிநியூஸ் பத்திரிகை கூறியுள்ளது. கெக்கிராவ தொகுதி உறுப்பினர் தர்மசேன ஜயசிங்கமாத்தறைத்தொகுதி உறுப்பினர் டி. ஜி. ஜினதாச கேகாலைத் தொகுதி உறுப்பினர் வின்சன்ட் ஜெயவர்த்தன ஆகியோரே தெரியாத்தனமாக கையெழுத்திட்டவர்கள் என டெய்லி நியூஸ் கூறியுள்ளது.

---

### கடற்படையின்

ஈடுபட்டிருந்தனர். அப்போது பருத்தித்துறைக் கடற்பகுதிக்கு ரோந்து வந்த சிறிலங்கா கடற்படையினர் இரு மீனவ இளைஞர்களையும் கைது செய்துபயங்கரமாகதாக்கினர். பின்னர் இருவரையும் போகுமாறு பணித்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் செல்வச்சோதி கொல்லப்பட்டார். ஜெயேந்திரன் உயிர்தப்பி கரை சேர்ந்தார். பருத்தித்துறையில் இரு வாரங்களுக்கு முன்னர் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற இன்னொரு மீனவ இளைஞர் காணாமல்போயுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கடற்பிராந்தியத்தில்சிறிலங்காகடற்படையினரின் ரோந்துநடவடிக்கைகள்மிக அதிகரித்திருப்பதனால்இப்பகுதி மீனவர்கள் பலத்த அச்சமும் பீதியும் கொண்டுள்ளனர். (25)

---

### உயிர்த்த

திகதி பிற்பகல் நான்கு மணிக்கும் மூன்றாம் திகதி பத்து முப்பது மணிக்கும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேறும் இந்த நாடகம் தொடர்ந்து நான்காம் திகதி பிற்பகல் நான்கு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மேடையேறவுள்ளது என விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு சழகம் அறிவித்துள்ளது.

---

வத்திற்கு எதிராக நாம் போராடப் புறப்பட்டோமோ அதே போன்ற அடாவடித்தனமான நடவடிக்கைகளில் எமது உறுப்பினர்கள் ஈடுபட நாம் அனுமதிக்கப்போவதில்லை.

தமிழீழ மக்களின் விடிவுக்காக தம்முயிரைக் கொடுத்த ஆயிரக்கணக்கான போராளிகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் சுதன் போன்ற ஒரு சிலரது நடவடிக்கைக்காக நாம் வெட்கப்படுகிறோம்; வேதனைப் படுகிறோம், எமது மக்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கிறோம் குறிப்பாக திரு. நவரத்தினம் அவர்களது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொண்டு மன்னிப்புக் கேட்கிறோம்

எமது விடுதலை இயக்கத்தை கொச்சைப்படுத்தும் வகையில் எமது அங்கத்தவர்கள் நடந்து கொள்ளும் போது எம்மக்களது நியாயமான கோபத்தை; கண்டிப்பை, விமர்சனத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும் இன்று எமது தாயகத்தில் சீர்குலைந்திருக்கும் சட்ட ஒழுங்கு விடயங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் எமது இயக்க உறுப்பினர்களே மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை; அனுமதிக்கமாட்டோம் என்பதை எமது மக்களுக்கு உறுதியாகக் கூறுகிறோம்.

---

### புலிகளின்

கைவிட்டு முகாமிற்குத் திரும்பியது. இத்தாக்குதலின்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் அறிய முடியவில்லை.

---

### 12 மணித்தியாலம்

வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

இத் தாக்குதல்கள் இரவு 7-30 மணிவரை நீடித்த போதிலும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்களை அறியமுடியவில்லை.

---

## (அருளம்பலம் தவக்குமார்)
### மானிப்பாய்

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீர வேங்கை லெஸ்ரனின் செய்தி கேட்டு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட போராளிகளுக்கும் எமக்கு ஆறுதல் கூறிய உறவினர்கள், உற்றார், நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மானிப்பாய்
மேற்கு

- குடும்ப தினர்

R/1697

---

## யாழ். பல்கலைக்கழக
# வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
### கல்வியாண்டு 1991 / 1992

[பல்கலைக்கழக வசதிகள் அனைத்தும் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்]

## கலைமுதற் தேர்வு - G. A. Q.
## வணிகமுதற் தேர்வு - 1st in Com.

**ஆகிய தேர்வுகளுக்கான பதிவுகள் 01 - 09 - 1991 முதல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்,**

*Registrar,*
## College of Higher Study,
***Anaipanthi.***

மு. குறிப்பு:

1. பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப் படும்.
2. பட்டப்படிப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த யாழ். விரிவுரையாளர்களும், யாழ். விக்னா கல்வி நிலைய விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

(B/3004)